| | ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | | |
|---|---|---|---|
| | மூன்றாம் தவணைப் பரீட்சை -2022(2023)<br>**Third Term Exam -2022(2023)** | | 16 \| I \| II |
| | இஸ்லாம்<br>Islam | தரம் 11<br>Grade 11 | நேரம் 2 மணித்தியாலம்<br>Time 2 Hours |

கவனிக்க:

i. எல்லா வினாக்களுக்கும் விடை தருக
ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தேர்வு செய்க.
iii. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
iv. அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றை பின்பற்றுக

1. நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹியாக இறக்கப்பட்ட வசனங்களின் எண்ணிக்கை யாது?
   (1) ஒன்று (2) இரண்டு (3) நான்கு (4) ஐந்து

2. ஒரு முஸ்லிம் பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருந்து அதனை நிறுவகிப்பது கிலாபத் எனப்படும். இது ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய மூன்று கடமைகளில் ஒன்றாகும். அடுத்து இரண்டும் யாவை?
   (1) இமாரத் - இபாதத் (2) மஆத் - தவ்ஹீத்
   (3) இபாதத் - ஜபரத் (4) முஆத் - மஆத்

3. கீழே தரப்பட்ட நீர் வகைகளுள் வுழூ செய்வதற்கு மிகவும் பொருத்தமான நீர் எது?
   (1) ஆலங்கட்டி நீர்,பனி, இளநீர் (2) ஆலங்கட்டி நீர் ,பனி,மழை நீர்.
   (3) பன்னீர் ,கடல் நீர், ஆற்று நீர் (4) ஊற்று நீர், கடல் நீர் ,மென்பானம்.

4. ஒரு பொருளின் விலை குறிக்கப்பட்டு பேரம் பேசலுக்கு சந்தர்ப்பம் காணப்படும் வியாபார முறை யாது?
   (1) முதாரபா (2) முழாரபா (3) முஷாரகா (4) முறாபஹா.

5. “மஃரிபா” என்பது
   (1) சுயவிசாரணை செய்தல் (2) சுயமதிப்பீடு
   (3) தூய உள்ள (4) அல்லாஹ்வை அறிவதன் மூலம் உளப்பேரிம்பம் அடைதல்

6. “ கிதாபுல் உம்மு ” எனும் நூலை எழுதியவர்
   (1) இமாம் ஹம்பலி (ரஹ்) (2) இமாம் ஷாஃபி (ரஹ்)
   (3)இமாம் மாலிக் (ரஹ்) (4) இமாம் அபூஹனீஃபா (ரஹ்)



kalvi.lk

7. பின்வருவனவற்றுள் உண்பதற்கு ஆகுமாக்கப்பட்ட உணவுகளில் **<u>மிகப் பொருத்தமான</u>** விடையை தேர்வு செய்க
   (1) முறையாக குர்பான் செய்யப்படாத இறந்த பிராணி
   (2) இயற்கையாக மரணித்த கோழி.
   (3) ஸகாத் வழங்க அனுமதிக்கப்படாத அனைத்து விலங்குகளும்.
   (4) ஸக்காத் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட பிராணிகள்

8. ஜமாஅத்தாக நிறைவேற்றப்படும் தொழுகைகளில் ஒன்று
   (1) பெருநாள் தொழுகை (2) லுஹா தொழுகை
   (3) வித்ர் தொழுகை (4) தஹஜ்ஜுத் தொழுகை

9. திருமண ஒப்பந்தத்தில் "ஈஜாப் " சொல்லக்கூடியவர்
   (1) மணப்பெண்ண் (2) மணமகன்
   (3) மணப்பெண்ணின் பொறுப்பாளர் (4) மணமகனின் பொறுப்பாளர்

10. " அத்தஹாரத்" என்பது
   (1) தொழுகையில் சுத்தத்தை பேணல்
   (2) சுத்தம்
   (3) வுழூ மற்றும் தயம்மும் மூலம் சுத்தம் அடைதல்
   (4) மிக சுத்தமான நீர்

11. "காத்தமுன் நபிய்யீன் " என்பதன் பொருள்
   (1) இறுதி நபி (2) நபிமார்களின் தலைவர்
   (3) நபிமார்களின் பரம்பரை (4) நபிமார்களின் வரிசை

12. தலாக் சொல்லப்பட்டு இந்தா அனுஷ்டிக்கும் பெண்ணுக்கு கணவனால் வழங்கப்படும் தாபரிப்புக் செலவு எவ்வாறு அழைக்கப்படும்?
   (1) ஸதகா (2) பித்யா (3) நபகா (4) கப்பாரா

13. உம்ராவின் பர்ழுகளில் அடங்காதது
   (1) தவாப் செய்தல் (2) தலைமுடி களைதல்
   (3) ஸஃயு செய்தல் (4) ஜம்ராக்களில் கற்களை எறிதல்

14. உஸ்மான் (ரழி) ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய கிலாபத்தை பலவீனப்படுத்துவதற்காக கிளர்ச்சி செய்தவன் யார்?
   (1) அப்துல்லாஹ் இப்னு ஸபா (2) அப்துல்லா இப்னு அர்கம்
   (3) அப்துல்லாஹ் இப்னு உமர் (4) அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்



kalvi.lk

15. “அ” பகுதியை “ஆ” பகுதியுடன் தொடர்புபடுத்தும் போது பொருந்தக்கூடிய சரியான விடையினை தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| (1) இமாம் ஒருவர் பக்தாதில் இருந்த காலத்தில் வழங்கிய தீர்ப்பு | A. பிக்ஹ் |
| (2) இமாம் ஒருவர் எகிப்தில் வாழ்ந்த காலத்தில் வழங்கிய தீர்ப்பு | B. கிரேக்க சிந்தனை தாக்கம் |
| (3) இஜ்திஹாத் மூலம் தோன்றம்பெறற கலை | C. கதீப் |
| (4) மு. ஃதஸிலா சிந்தனைகளின் வளர்ச்சி | D. ஜதீத் |

(1) CDBA (2) DCAB (3) CDAB (4) BADC

16. பலஸ்தீனத்தில் பிறந்து எகிப்தில் மரணித்த இமாம் அவர்களின் இயற் பெயர் யாது?
(1) இமாம் மாலிக் இப்னு அனஸ் (ரஹ்)
(2) இமாம் நு. ஃமான் இப்னு சாபித் (ரஹ்)
(3) இமாம் அஹ்மத் இப்னு முஹம்மது ஹம்பல் (ரஹ்)
(4) இமாம் முஹம்மத் இப்னு இத்ரீஸ் (ரஹ்)

17. ஹதீஸ் கலையில் பிரசித்தி பெற்ற இமாம் அபூதாவூத்(ரஹ்) அவர்களின் பிறந்த ஊர் எது?

(1) ஸிஜிஸ்தான் (2) புஹாரா (3) கஸ்வின் (4) நைசாவூர்

18. “அ” பகுதியை “ஆ” பகுதியுடன் தொடர்புபடுத்தும் போது பொருந்தக்கூடிய சரியான விடையினை தெரிவு செய்க

| அ | ஆ |
|---|---|
| (1) இமாம் புகாரி (ரஹ்) | A) ஹிஜ்ரி 201 |
| (2) இமாம் முஸ்லிம் (ரஹ்) | B) ஹிஜ்ரி 194 |
| (3) இமாம் திர்மிதி (ரஹ்) | C) ஹிஜ்ரி 204 |
| (4) இமாம் அபூதாவூத் (ரஹ்) | D) ஹிஜ்ரி 209 |

(1) BCDA (2) BACD (3) ABCD (4) ABDC

19. அரபு நாட்டின் கிழக்கெல்லை யாது?
(1) சிரியா பாலைவனம் (2) செங்கடல் (3) அரபுக் கடல் (4) பாரசீக வளைகுடா

20. கீழே தரப்பட்ட சொற்களுள் தலாக்குடன் சம்பந்தப்பட்ட விடையை மாத்திரம் கொண்ட தொகுதி

A. ஈலாஉ B. பாஇன் C. அகாயித் D. சலம்

E. ரஜஈ F. பித்யா G. லிஹார் H. முகல்லித்

(1) ABEF (2) ABEG (3) ABGH (4) BCEG



kalvi.lk

21. ஷர்மிளாவின் தந்தையின் மரண வீட்டிற்கு வருகை தந்த ஷர்மிளாவின் பெரியம்மாவும் அவரின் மகள் மற்றும் மகன், சின்னம்மாவின் மகள் மற்றும் மகன் ஆகிய அனைவரும் ஷர்மிளாவுடன் ஒன்றாக ஒரே சகனில் இருந்து பகலுணவை உட்கொண்டனர். இச் செற்பாட்டுடன் தொடர்பான சரியான கூற்று எது?
(1) குடும்பங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது.
(2) கஷர்மிளாவின் உள்ளத்தில் உள்ள கவலை நீங்க சந்தர்ப்பமாக இச்செயற்பாடு விளங்குகிறது.
(3) ஷரீ ஆ சட்டத்தின் படி மஹ்ரமி மற்றும் அஜ்னபி வரையறை பேணப்பட்டுள்ளது.
(4) ஷரீ ஆ சட்டத்தின் படி ம ஃரமி மற்றும் அஜினபி வரையறையை மீறப்பட்டுள்ளது .

22. பின்வரும் உடன்படிக்கைகளுல் நபி (ஸல்) அவர்கள் மக்கா காலத்தில் செய்த உடன்படிக்கை எது?
(1) அகபா உடபடிக்கை (2) மதீனா சாசனம்
(3) உதைபிய்யா உடன்படிக்கை (4) பய்அதுர் ரிழ்வான் ஒப்பந்தம்

23. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் போலி நபி என தன்னை அறிமுகப்படுத்தியவன்,
(1) முசைலமா (2) துலைஹா (3) அபூ லுஉலுஆ (4) ஸஜா

24. பருவமடைந்த ஒரு ஆண் தனது முழங்காலுக்கு மேல் ஆடையை அணிந்த நிலையில் விளையாட்டுகளில் ஈடுபடுதலானது ஷரீ ஆவின் பார்வையில்
(1) மக்ரூ ஆகும் (2) ஹராமாகவும் (3) தவறாகும் (4) விரும்பத்தகாதது .

25. “ இஹ்லாஸ்” என்பதன் பொருள் யாது?
(1) இறையச்சம் (2) நற்பண்பு
(3) தூய எண்ணம் (4) நபி (ஸல்)அவர்களின் நற்குணங்கள்.

26. நீதித்துறையை சுயாதீனமாக இயங்க வைத்த கலீபா யார்?
(1) அபூபக்கர் (ரழி) (2) உமர் (ரழி) (3) உஸ்மான் (ரழி) (4) அலீ (ரழி)

27. இஸ்லாமிய வியாபாரத்தின் அடிப்படைகளில் ஒன்று.
(1) வியாபாரம் செய்பவர் ஆணாக இருத்தல்
(2) வியாபாரம் செய்யக்கூடியவர் முஸ்லிமாக இருத்தல்.
(3) வாங்குபவர் ,விற்பவர் பொருளை விற்றதாகவும் ஏற்றுக்கொண்டதாகவும் வெளிப்படுத்தும் திருப்பதி..
(4) வாங்குபவர் உடற் குறைப்பாடற்றவராக இருத்தல்

28. “ இஸ்திஹ்ஸான்” என்பது
(1) இஸ்லாத்தின் அடிப்படை சட்டமூலாதாரம்.
(2) துணை மூலாதாரங்களில் ஒன்றாகும்.
(3) சுன்னத்தான நற்கருமங்களின் தொகுப்பு.
(4) நண்பர்கள் இருவர் கைலாகு செய்தல்.

29. மக்காவில் குரைஷியர்களின் எதிர்ப்பிலிருந்து முஸ்லிம்களை பாதுகாப்பதற்காக நபி (ஸல்)அவர்கள் ஸஹாபாக்களை அனுப்பிய நாடு எது?.
(1) ஹபசா (2) தாயிப் (3) யெமன் (4) மதீனா


kalvi.lk

30. கணவன் மரணிக்கும் போது இரண்டு மாத கர்ப்பிணியாக இருந்த பெண் இத்தா அனுஷ்டிக்கவேண்டிய காலம்?
(1) மூன்று மாதங்கள் (2) நான்கு மாதமும் பத்து நாட்களும்
(3) குழந்தை பிறக்கும் வரை (4) இறுதி ஏழு மாதங்கள்

31."திருமணமானவர் அரணுக்குள் பாதுகாப்பாக இருப்பார்"என்பது நபி மொழியாகும். இப் பாதுகாப்பு அரண் அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்.
(1) ஹிஸ்ன் (2) அஹ்ஸன் (3) முஹ்ஸன் (4) அஸ்ஹாப்

32. "குத்தாபுல் வஹீ" எனப்படுவோர்
(1) ஹதீஸ்களை எழுதியவர்கள் (2) வஹியை எழுதியவர்கள்
(3) அல்குர்ஆனை தொகுத்தவர்கள் (4) அல்குர்ஆனை பிரதிபண்ணியவர்களள.

33. "இல்ஹாத் "என்பது
(1) இணைவைத்தல் (2) மறுத்தல் (3) வட்டி (4) நாத்திகம்

34. ஸ்பெயினை வெற்றி கொண்ட தலைவர் யார்?
(1) தாரிக் பின் ஸியாத் (2) உமர் இப்னு அப்துல் அஸீஸ்
(3) முஹம்மத் பின் காசிம் (4) முஹம்மத் அல் பாதி

35."காப்பதுலின்நாஸ்" என்பதன் பொருள்
(1) அகிலங்களின் இரட்சகன் (2) அகிலங்களின் அருட்கொடை
(3) மனிதர்களின் இறைவன் (4) முழு மனித சமுதாயத்திற்குமான நபி.

36. நபி (ஸல்) அவர்கள்- ஸஹாபாக்கள் - தாபியீன்கள்- தபஉத்தாபிஈன்கள் எனும் தொடரில் ஸஹாபாக்களின் இடத்தில் உள்ளவர் பின்வருவோருள் யார்?
(1) இமாம் ஷாஃபி (2) நஜ்ஜாஷி மன்னன்
(3) ஸைத் பின் ஸாபித் (4) தாரிக் பின் ஸியாத்.

37.குறித்த ஒரு யுத்தத்திற்காக நபி (ஸல்) அவர்கள் அழைப்பு விடுத்த போது அபூபக்கர் (ரழி)அவர்கள் யுத்த செலவுக்காக தமது செல்வம் அனைத்தையும் கொண்டு வந்து நபியவர்கள் முன்னிலையில் குவித்தார்கள். அந்த யுத்தம் எது?
(1)பத்ர் யுத்தம் (2) உஹத் யுத்தம் (3) கந்தக் யுத்தம் (4) தபூக் யுத்தம்

38. "ஸலாத் "எனும் அரபுப்பதத்தின் பொருளானது
(1) வணங்குதல் (2) முயற்சித்தல் (3) பிரார்த்தனை செய்தல் (4) பொறுப்பேற்றல்

39. ரமழான் மாதத்தின் பதினாறாம் இரவு முதல் இறுதிவரை வித்ரு தொழுகையில் ஓதப்படும் ஓதல் எது?
(1) வஜ்ஜஹ்து ஓதல் (2) குனூத் ஓதல் (3) பாத்திஹா ஓதல் (4) தஸ்பீஃ ஓதல்.

40. "உம்மத்" என்ற சொல்லின் மொழி கருத்து யாது?
(1) ஒற்றுமை - தைரியம் (2) பரம்பரை - பழக்கவழக்கம்
(3) தாய் - சமூகம் (4) பொதுநோக்கு – இலட்சியம்

(1X40=40 புள்ளிகள்)



kalvi.lk

பகுதி II

| | |
|---|---|
| i. | **முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரை விடை எழுதுக** |
| ii. | **முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு** வினாவின் விடைக்கும் 10 **புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்** |

1. சுருக்கமான விடை தருக

I. அஃலுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் என்றால் என்ன?
II. "அஸ்ஸலம்" என்பதுபற்றி உமது நண்பருக்கு நீர் எவ்வாறு விளக்குவீர்?
III. சொல் சார்ந்த குப்ர்க்கு இரண்டு உதாரணம் தருக
IV. ஸக்காத் பெறத் தகுதியற்ற இருவரை குறிப்பிடுக
V. இலங்கை முஸ்லிம்கள் என்ற வகையில் நாம் தேசத்தின் நலனுக்காக செய்யக்கூடிய இரண்டு சேவைகளை எழுதுக
VI. தொழுகையின் மூலம் முஸ்லிம்கள் பாதுகாப்பு அடையக்கூடிய இரண்டு பாவங்களை குறிப்பிடுக
VII. அலீ (ரழி) அவர்களிடம் காணப்பட்ட ஆளுமை பண்புகள் இரண்டு தருக
VIII. நடுநிலைப்பேனல் என்பதனை குறிக்கும் அரபு பதம் யாது?
IX. சேவை தொழிலின் இரண்டு பிரிவுகளையும் குறிப்பிட்டு உதாரணம் தருக
X. முதலாளித்துவ பொருளாதார முறை என்றால் என்ன? (2x10=20 புள்ளிகள்)

**2.**

I. ஸுஹுபுக்கள் கொடுக்கப்பட்ட நான்கு நபிமார்களையும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஸுஹுபுக்களின் எண்ணிக்கைகளையும் தருக
II. இபாதத்தில் நோக்கங்கள் மூன்றினை தருக
III. அகீதா துறை அறிஞர்கள் அகீதாவை பிரித்துள்ள நான்கு பிரிவுகளையும் குறிப்பிட்டு உதாரணத்துடன் விளக்குக (2+3+5= 10 புள்ளிகள்)

**3.**

I. இலகுவான நஜீஸ் என்றால் என்ன?
II. தஸ்கியாவின் மூன்று நிலைகளையும் குறிப்பிட்டு விளக்குக
IV. நீரின் வகைகளை குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக (2+3+5= 10 புள்ளிகள்)

**4.**

I. பர்ள் தொழுகையைத் தொடர்ந்து ஆயத்துல் குர்ஸியை ஓதுவதன் மூலம் கிடைக்கக்கூடிய இரண்டு பயன்களை குறிப்பிடுக
II. நாணயம் தொடர்பான அல்குர்ஆன் அல்லது ஹதீஸ் கூற்று ஒன்றை எழுதுக
V. கலீபா உஸ்மான் (ரழி) அவர்களால் ஆற்றப்பட்ட சேவைகளை விளக்குக (2+3+5= 10 புள்ளிகள்)

**5.**

I. அழைப்பில் தவிர்க்கப்பட வேண்டிய விடங்கள் நான்கு தருக
II. திருமணத்தின் நோக்கங்கள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக
VI. நபி (ஸல்) அவர்களின் மக்கா காலா பிரச்சாரத்தை தடுப்பதற்காக குரைஷியர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை குறிப்பிடுக. (2+3+5= 10 புள்ளிகள்)

**6.**

I. நபி (ஸல்) அவர்கள் ஏனைய மனிதர்களுக்கு தஃவா செய்யுமாறு கட்டளையிடப்பட்ட ஸூரா எது?
II. முன்மாதிரியான இஸ்லாமிய குடும்பத்தின் மனைவியின் கடமைகள் யாவை?
III. திருமண ஒப்பந்தத்தில் ஷாஹிதாக வருபவருக்கான நிபந்தனைகள் யாவை? (2+3+5= 10 புள்ளிகள்)

7. எவையேனும் இரண்டு பற்றி சிறு குறிப்பு எழுதுக

I. வாழ்க்கை ஒரு வணக்கமாகும்.
II. ஈகையின் மூலம் அடையும் பயன்கள்
III. ஹிஜ்ரத்தின் பின் முஸ்லிம்கள் அடைந்த அனுகூலங்கள்.
IV. உங்களால் அவதானிக்கப்பட்ட திருமண வீடுகளில் நடைபெறும் ஷரீஆவிற்கு முரணான அம்சங்கள் ஐந்திணை குறிப்பிட்டு விளக்குக (2X 5= 10 புள்ளிகள்)



kalvi.lk


2025
1ம் தவணை வகுப்புகள்
தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
ஆரம்பம் 01.01.2025
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.
அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...
Education கல்வி
Kalvi.lk
Whatsapp
075 287 1457